இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 01-07-2025

# முதலில் உங்கள் கட்சியை மீட்கவும்!

“தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்கப் போகிறேன்” என்று கிளம்பி இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. முதலில் அவர் பா.ஜ.க.விடம் அடமானம் வைக்கப்பட்ட அ.தி.மு.க.வை மீட்கட்டும். அதன் பிறகு தமிழ்நாட்டை மீட்கலாம்.

தான் பதவி வகித்த காலத்தில் தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளையும் பா.ஜ.க. தலைமையிடம் அடமானம் வைத்தவர்தான் இந்த பழனிசாமி. அவர்தான் வந்து வாய்கிழியப் பேசுகிறார்.

**‘நீட் தேர்வை எழுதித்தாங்க ஆகணும்’ என்று சொன்னது எந்த வாய்? பழனிசாமியின் வாய்தான். குடியுரிமைச் சட்டத்தை ஆதரித்து வாக்களிக்க உத்தரவிட்டது யார்? இதே பழனிசாமி தான். மூன்று வேளாண் சட்டத்தை ஆதரித்தது யார்? அதே பழனிசாமிதான். காவிரிப் பிரச்சினைக்காக கண்காணிப்பு ஆணையம் அமைக்கலாம் என்று சொன்னதற்கு மாறாக ஜல் சக்தி துறையிடம் அது ஒரு குழுவாக பா.ஜ.க. அரசு ஆக்கியபோது வாய்மூடி, கண்மூடிக் கிடந்து துரோகம் செய்தது யார்? இதே பழனிசாமிதான். தமிழ்நாட்டின் நிதிக்காக போராடினாரா? இல்லை. தமிழ்நாட்டின் நீதிக்காகப் போராடினாரா? இல்லை. தமிழ்நாட்டின் திட்டங்களுக்காகப் போராடினாரா? இல்லை. எதுவும் செய்யவில்லை. சும்மா, ‘மிக்சர்’ சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்.**

தன்னிடம் இருக்கும் முதலமைச்சர் நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, பா.ஜ.க. தலைமை சொல்வதற்கு எல்லாம் தலையாட்டிக் கொண்டிருந்தார் பழனிசாமி. என்னை இந்த நாற்காலியில் உட்கார வைத்திருந்தால் போதும் என்று நினைத்தார். அவரது அரசியல் அவ்வளவுதான். தமிழ்நாட்டைப் பற்றியோ, தமிழ்நாட்டின் உரிமையைப் பற்றியோ அவருக்கு எந்தக் கவலையும் அப்போதும் கிடையாது. இப்போதும் கிடையாது. எப்போதும் கிடையாது.

**‘உனது பதவியைக் காப்பாற்றிக் கொடுத்த எங்களுக்கு கைமாறு செய்’ என்று கேட்கிறது பா.ஜ.க. பன்னீர்செல்வம் இல்லாத, தினகரன் இல்லாத, சசிகலா இல்லாத கூட்டணி வேண்டும் என்கிறார் பழனிசாமி. ஏனென்றால் மீண்டும் போய், சசிகலா காலில் விழ முடியாது என்று நினைக்கிறார். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு பா.ஜ.க.வின் கொத்தடிமைகளாக பல்வேறு வழிகளில் மாற்றப்பட்டவர்கள் இவர்கள். இவர்களைக் கைவிட்டு விடக் கூடாது என்று பா.ஜ.க. நினைக்கிறது. இந்த நிலையில்தான் பா.ஜ.க. தனக்குத் தெரிந்த ஒரே வழியான, ‘ரெய்டு’ மூலமாக பழனிசாமியை மிரட்டியது. ‘பா.ஜ.க.வுடன் எப்போதும் கூட்டணி இல்லை’ என்று சொல்லி வந்த பழனிசாமி, பா.ஜ.க.வின் காலடியில் பதுங்கினார். கூட்டணிக்கு உடன்பட்டார்.**

அந்த கூட்டணி அறிவிப்பையாவது பழனிசாமி செய்தாரா? இல்லை. இதனை அமித்ஷா அறிவித்த மேடையிலாவது, பழனிசாமிக்கு பேச அனுமதி கிடைத்ததா? இல்லை. அறிவித்தார் அமித்ஷா. அவ்வளவுதான். பழனிசாமியின் கதை அத்தோடு முடிக்கப்பட்டது.

அது முதல் அமித்ஷா பேசுவது, ‘தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி’ என்பதுதான். ‘பழனிசாமிதான் அடமானம் வைத்துவிட்டாரே? அதன்பிறகு அவரிடம் என்ன கேட்க வேண்டும்?’ என்று நினைக்கிறார் அமித்ஷா. ஆனால் இதனை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள பழனிசாமிக்கு வெட்கமாக இருக்கிறது.

**அமித்ஷா மிக எச்சரிக்கையாகவே சொல்லி இருக்கிறார். ‘பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும், முதலமைச்சர் அ.தி.மு.க.வில் இருந்து வருவார்’ என்று சொல்லி இருக்கிறார். பழனிசாமி பேரைச் சொல்லவில்லை. ஏனென்றால், பழனிசாமி இல்லாத வேறொருவரை பா.ஜ.க. தயார் செய்துவிட்டது பா.ஜ.க. இது ஊரறிந்த ரகசியம்தான். அது எஸ்.பி.வேலுமணியாக இருக்கலாம். கோவை வந்த அமித்ஷா தான் கலந்து கொண்ட விழாவில் தனக்குப் பக்கத்தில் எஸ்.பி.வேலுமணியைத்தான் வைத்திருந்தார். சில நாட்களுக்கு முன்னால் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கலந்து கொண்ட விழாவிலும் எஸ்.பி.வேலுமணிக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. ‘அ.தி.மு.க.வில் இருந்து ஒருவர்’ என்று அமித்ஷா சொல்லும் பின்னணி இதுதான்.**

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு வெங்கையா நாயுடுவை தமிழ்நாட்டுக்காகத் தயார் செய்தது பா.ஜ.க. அது கைகூடவில்லை என்றதும், நிர்மலா சீதாராமனை தயார் செய்தார்கள். அவரும் மயிலாப்பூரில் காய்கறி வாங்கினார். மாம்பலத்தில் நடந்து பார்த்தார். தூத்துக்குடியில் மக்களைச் சந்தித்தார். மக்கள் திரும்பிப் பார்க்கவில்லை. அதனால் அவரையும் டெல்லிக்கே வைத்துக் கொண்டார்கள். அண்ணாமலை வாயைக் கொடுத்தும் மாட்டிக் கொண்டார். ‘கையைக்’ கொடுத்தும் மாட்டிக் கொண்டார். எனவே பா.ஜ.க. முகம் எதுவும் டெபாசிட் வாங்கக் கூடத் தேறாது என்பதை அமித்ஷா அறிவார். இறுதியாக பழனிசாமியைப் பயமுறுத்தி அ.தி.மு.க.வை அபகரித்துவிட்டார்கள். பழனிசாமிக்கும் ‘மாற்றுத் தலைவர்’ உருவாக்கிவிட்டார்கள்.

‘முதலமைச்சர் யார் என்பதை பா.ஜ.க. நாடாளுமன்றக் கமிட்டிதான் முடிவு செய்யும்’ என்று எச்.ராஜா சொன்னதை விட பழனிசாமிக்கு கேவலம் வேண்டுமா? மானஸ்தர் இதனைத் தாங்கிக் கொள்வாரா? ‘ஒரே ஒரு ஆண்டுக்கு கட்சித் தலைவராக இருங்கள்’ என்று வாய்ப்பளிக்கப்படாத ராஜா சொல்கிறார் பழனிசாமிக்கு பதில். இதனை விட அவமானம் வேண்டுமா? அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சியையே, பா.ஜ.க.வின் நாடாளுமன்றக் கமிட்டியோடு இணைத்து விட்டார்கள். விழிபிதுங்கிக் கிடக்கிறார் பழனிசாமி.

**இத்தகைய கேவலமான சூழலை மறைக்கத்தான், ‘தமிழ்நாட்டு உரிமைகளை மீட்கப் போகிறேன்’ என்கிறார் பழனிசாமி. அவருக்கும் இன்னும் பத்து மாதம் பொழுது போக வேண்டாமா?**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.06.2025) போக்குவரத்துத் துறை சார்பில் சென்னை, வியாசர்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டிலேயே அரசு போக்குவரத்துக் கழகங்களில் முதல் முறையாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 47.50 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட வியாசர்பாடி மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், போக்குவரத்து துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் த.பிரபு சங்கர், அசோக் லேலண்ட் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் ஷேனு அகர்வால், மாநகர் போக்குவரத்து கழக இணை மேலாண் இயக்குனர் செ.நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

# 8 மீனவர்களை பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, ஜுலை 1 -**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 8 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வரவும், மீனவர்கள் பிரச்சினைகளைக் கையாள்வதில், இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 8 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதை உறுதி செய்யவும், மீன்பிடிதொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில், கட்டுப்பாடு மற்றும் பரஸ்பர புரிதலை உறுதி செய்வதற்கு இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.06.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பையும் கடுமையாக பாதிக்கும் இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கை குறித்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்துள்ள முதலமைச்சர் அவர்கள், 29.06.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 08 மீனவர்களுடன், INDTN 10MM773 பதிவு எண் கொண்ட அவர்களது இயந்திர மயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகையும் சிறை பிடித்துள்ளதாக வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய கைது நடவடிக்கைகள், படகுகள் மற்றும் உபகரணங்கள் இழப்பிற்கும், நீண்டகால சிறை பிடிப்பிற்கும் வழிவகுப்பதோடு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். எனவே கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதை உறுதி செய்ய ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட வேண்டும் என்று தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

வருடாந்திர மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்து, மீன்பிடிப் பருவம் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில், நமது மீனவர்கள் வாழ்வாதாரம் ஈட்டும் நம்பிக்கையுடன் மீன்பிடிக்க கடலுக்குத் திரும்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள் மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில், கட்டுப்பாடு மற்றும் பரஸ்பர புரிதலை உறுதி செய்ய இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### 115 உதவி மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்ட

# மருத்துவப் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜுலை 1 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 59 சித்தா உதவி மருத்துவ அலுவலர்கள், 2 ஆயுர்வேதா உதவி மருத்துவ அலுவலர்கள், 1 யுனானி உதவி மருத்துவ அலுவலர், 53 யோகா மற்றும் இயற்கை மருத்துவ உதவி மருத்துவ அலுவலர்கள்/விரிவுரையாளர்கள் (நிலைII) மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 57 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை3 ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மொத்தம் 172 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் செயல்படும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம், இந்திய மருத்துவ முறையை முக்கிய அங்கமாகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு மருத்துவ நிலையங்களில் இந்திய மருத்துவ முறைக்கான பிரிவுகள் / மருத்துவமனைகளை திறப்பதன் மூலம் முழுமையான சுகாதார பராமரிப்பு மற்றும் பாரம்பரிய அமைப்பின் நன்மைகளை பொதுமக்களுக்கு அளித்து வருகிறது. நாட்டிலேயே சித்தா, ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவ பிரிவுகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு என்பது குறிப்பிடத்தக்கது. இம்மருத்துவ பிரிவுகள் நோய்த்தடுப்பு, ஊக்குவிப்பு, குணப்படுத்து தல், மறுவாழ்வு மற்றும் புத்துணர்ச்சி தேவைகளை உள்ளடக்கிய பரந்த அளவிலான சிகிச்சைகளை வழங்குகிறது.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகத்தின் பணி தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்களை நிரப்பிடும் வகையில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 59 சித்தா உதவி மருத்துவ அலுவலர்கள், 2 ஆயுர்வேதா உதவி மருத்துவ அலுவலர்கள்,

1 யுனானி உதவி மருத்துவ அலுவலர் மற்றும் 53 யோகா மற்றும் இயற்கை மருத்துவ உதவி மருத்துவ அலுவலர்கள்/விரிவுரையாளர்கள் (நிலைII), என மொத்தம் 115 உதவி மருத்துவ அலுவர்களுக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கினார்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 57 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3 பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு 12.05.2025 அன்று கலந்தாய்வு நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட 57 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கினார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 4634 உதவி மருத்துவர்கள், 27 மாற்றுத்திறனாளி செவிலியர்கள், 2772 இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் உள்ளடக்கிய 7433 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.** 2024 - 2025ஆம் ஆண்டில் 7 பதவிகளுக்கு மொத்தம் 4080 பணியாளர்களும், 2025ஆம் ஆண்டிற்கான மீதமுள்ள 20 பணி பிரிவுகளில் 9722 பணியிடங்களுக்கான தேர்வுகள் 2025 டிசம்பர் மாதத்திற்குள் முடித்திட பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 555 உதவியாளர் பணியிடங்கள், 584 இளநிலை உதவியாளர் பணியிடங்கள், 187 தட்டச்சர் பணியிடங்கள் மற்றும் 255 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3 பணியிடங்கள் நிரப்பப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர். தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் கருணை அடிப்படையில் 74 இளநிலை உதவியாளர் பணியிடங்களும், 11 தட்டச்சர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளது. செவிலியர்களின் நலன் கருதி ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 3613 செவிலியர்களை காலமுறை ஊதிய அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது.**

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி எம்.விஜயலட்சுமி, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தலைவர் திருமதி பி.உமா மகேஸ்வரி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் கூடுதல் இயக்குநர்

மரு. த.கா. சித்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் உரையாற்றினார். உடன் மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.